# பெப்ரவரி– 26 – திங்கள்

## புனித தூய மெத்தில் அம்மா

## “பிறர் குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்காதீர்கள். அப்பொழுதுதான் நீங்களும் தீர்ப்புக்குள்ளாக மாட்டீர்கள்” (லூாக். 6:36)

**முதல் வாசகம் : தானியேல்9 : 4 – 10**

என் கடவுளாகிய ஆண்டவர்முன் என் பாவங்களை அறிக்கையிட்டு நான் மன்றாடியது ”என் தலைவரே! நீர் மாட்சிமிக்க அஞ்சுதற்குரிய இறைவன். உம்மீது அன்புகொண்டு உம் கட்டளைகளின்படி நடப்பவர்களுடன் நீர் செய்துகொண்ட உடன்படிக்கையைக் காத்து அவர்களுக்குப் பேரன்பு காட்டுகின்றீர்! நாங்கள் பாவம் செய்தோம் வழி தவறி நடந்தோம் பொல்லாதவர்களாய் வாழ்ந்து உம்மை எதிர்த்து நின்றோம். உம் கட்டளைகளையும் நீதிநெறிகளையும் கைவிட்டோம். எங்களுடைய அரசர்கள் தலைவர்கள், தந்தையர்கள், நாட்டிலுள்ள மக்கள் அனைவர்க்கும் இறைவாக்கினர்களாகிய உம் ஊழியர்கள் உமது பெயரால் பேசியதற்கு நாங்கள் செவி கொடுக்கவில்லை. என் தலைவரே! நீதி உமக்கு உரியது எமக்கோ இன்று வரை கிடைத்துள்ளது அவமானமே. ஏனெனில், யூதாவின் ஆண்களும் எருசலேம்வாழ் மக்களும், இஸ்ரயேலைச் சார்ந்த யாவரும் ஆகிய நாங்கள், உமக்கு எதிராகச் செய்த துரோகத்தின் பொருட்டு, அருகிலோ தொலையிலோ உள்ள எல்லா நாடுகளுக்கும் உம்மால் இன்றுவரை விரட்டப்பட்டுள்ளோம். ஆம், ஆண்டவரே! அவமானமே எங்களுக்கும் எங்கள் அரசர்களுக்கும் தலைவர்களுக்கும் தந்தையர்களுக்கும் கிடைத்துள்ளது. ஏனெனில், நாங்கள் உமக்கு எதிராகப் பாவம் செய்தோம். எங்கள் தலைவரும் கடவுளுமாகிய உம்மிடத்தில் இரக்கமும் மன்னிப்பும் உண்டு. நாங்களோ உம்மை எதிர்த்துநின்றோம். எங்கள் கடவுளாகிய ஆண்டவர் தம் ஊழியர்களான இறைவாக்கினர் மூலம் தம் திருச்சட்டங்களை அளித்து அவற்றின் வழியில் நடக்குமாறு பணித்தார்.

**பதில்பாடல் :** ஆண்டவரே எம் பாவங்களுக்கு ஏற்றபடி எம்மை நடத்தாதேயும்

**நற்செய்தி : லூாக்கா6:36-38**

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள்.”பிறர் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்காதீர்கள் அப்போதுதான் நீங்களும் தீர்ப்புக்குள்ளாக மாட்டீர்கள். மற்றவர்களைக் கண்டனம் செய்யாதீர்கள் அப்போதுதான் நீங்களும் கண்டனத்துக்கு ஆளாக மாட்டீர்கள். மன்னியுங்கள் மன்னிப்புப் பெறுவீர்கள்.கொடுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும் அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியில் போடுவார்கள். நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்.” என்றார்.

**தியானம்:** தவக்கால இறைவார்தைகள் மன்னிப்பு அளிக்கவும் ஒப்புரவாகவும் நம்மை அழைக்கின்றன. குறிப்பாக இன்றைய வாசகங்களில் இரக்கமுள்ளவராய் இருங்கள், தீர்ப்பிடாதீர்கள், கண்டனம் செய்யாதீர்கள், மன்னியுங்கள் என்று மகத்தான வாழ்வுக்கு அழைக்கிறார் இயேசு. தீர்ப்பிடுவது அழிவுக்கு வழிவகுத்து விடுகின்றது. சுயநீதி இறைவனுக்கு அருவருப்பானது. முதல் வாசகத்தில் கடவுளின் பரிவும், கருணையிலும் உறுதியான நம்பிக்கை உடையவரான தானியேல் தம்மக்கள் பாவம் செய்துவிட்டார்கள் என்று கடவுளிடம் அறிக்கையிட்டு அவர்களுக்காக வேண்டுகின்றார். கடவுள் பரிவும். இரக்கமுமமாய் இருப்பது போல் எம்மையும் அவ்வாறு இருக்க அழைக்கின்றார். நாம் எந்த அளவிற்கு எமது சகோதரருக்கு பரிவு காட்டுகின்றோமோ அந்த அளவு கடவுளும் நமக்கு பரிவு காட்டுகிறார். இதனையே எந்த அளவையால் அளககிறீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும் என்று இரக்கத்திற்கு அளவு குறிக்க வேண்டாம் என்பதை எதிர்மறையாக கூறுகிறார். ஆகவே நாம் கருணையுறுவோம், வெறுப்பை வேரறுப்போம், கடவுளின் பிள்ளைகளாக வாழ்வோம்.